# தேவனுடைய மக்களுக்குள் அவருடைய ராஜ்யம்
# GOD'S KINGDOM WITHIN HIS PEOPLE

**அறிமுகம்**

தேவனுடைய நித்திய ராஜ்யத்தில் பிள்ளைகளாக இருக்கும்படிக்கு தேவன் மனுக்குலத்தை உருவாக்கினார். இதுவே பரிசுத்த வேதாகமம் தெரிவிக்கும் முக்கியமான விவரமாகும். பேதுரு சொல்வதைப் போல் “நாங்கள் தந்திரமான கட்டுக்கதைகளை பின்பற்றுபவர்கள் அல்ல.” *2 பேதுரு 1:16.* “பரிசுத்த மனுஷர்கள் பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டுப் பேசினார்கள்.” *2 பேதுரு 1:21.* பரிசுத்த வேதாகமம் தேவனுடைய வார்த்தையாக இருக்கின்றது. *2 தீமோத்தேயு 3:16,17.* தேவனுடைய உடன்படிக்கைகள் மீது விசுவாசம் கொண்ட மக்களை தேவன் எப்படி ஆளுகை செய்துவந்தார் என்று பழைய ஏற்பாடு நமக்குத் தெரிவிக்கின்றது. *ஆதி. 2:15-17; 22:16-18; ஏசாயா 61:8; லூக். 17:20,21; கலா. 3:15-18; எபிரெயர் 8:6-12.* இந்த விவரங்கள் “மோசேயின் நியாயப்பிரமாணத்திலும், தீர்க்கதரிசிகளின் ஆகமங்களிலும் சங்கீதங்களிலும்” எழுதியிருக்கிறவைகளின் நிறைவேற்றமாக புதிய ஏற்பாடு எப்படி அமைந்துள்ளது என்பதை கிறிஸ்தவர்கள் புரிந்துகொள்வதற்கு உதவுகின்றன. *லூக்கா 24:44.*

புதிய உடன்படிக்கையைக் குறித்து கேள்விப்பட்டு, நம்பி, அதன்மீது விசுவாசம் கொண்டவர்களை “கிறிஸ்துவுக்குள்” அவருடைய ராஜ்யத்துக் குரியவர்களாக தேவன் முன்னறிந்துகொண்டார். முன்னறிவு என்ற வார்த்தை **புரோகினோஸ்கோ** (Proginosko) என்ற கிரேக்க வார்த்தையிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இது தெய்வீக அறிவைக் குறிக்கும் ஒரு வினைச் சொல்லாகும், வைய்ன்ஸ் கிரேக்க அகராதி (Vines Greek Dictionary). “முன்னமே அறிந்துகொள்ளுதல்” என்பது இதன் அர்த்தம். எபேசு பட்டணத்தில் பவுல் தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்து பிரசங்கித்தபோது தேவனுடைய முன்னறிவைக் குறித்தே பிரசங்கித்தான். பார்க்கவும் *அப்போஸ்தலர் 19:8 மற்றும் எபேசியர் 1:3-14.*

உலகத்தோற்றத்துக்கு முன்னமே, கிறிஸ்துவுக்குள் ஆளுகையை ஏற்படுத்தவேண்டும் என்ற எண்ணம் தேவனுடைய மனதில் இருந்தது. *எபேசியர் 1:4.* கிறிஸ்துவுக்குள்ளான ஆவிக்குரிய ராஜ்யம் என்பது இயேசுகிறிஸ்து மூலமாக தேவன் ஆளுகை செய்வதாகும். ஆகையினால், அது அவருடைய ராஜ்யம், தேவனும், பிதாவுமாயிருப்பவருக்கு ராஜ்யத்தை ஒப்புக்கொடுப்பார். *1 கொரி. 15:24.* சாத்தானுடைய ஆளுகை நன்மை, தீமை அறிந்தவர்களாய் இந்த உலகத்தில் வாழும் எல்லார் மீதும் இருக்கின்றது. *யோவான் 18:36; 1 யோவான் 2:15-17.*

கிறிஸ்தவர்களுடைய இருதயங்களில் இடம் பெற்றிருக்கும் தேவனுடைய ஆளுகையானது அவருடைய ராஜ்யத்தை அடையாளப் படுத்துகின்றது; அவருடைய சித்தம் எங்கு செய்யப்படுகிறதோ, அங்கே அவருடைய ஆளுகையும் செயல்படுகிறது. புதிய ஏற்பாட்டில் நாம் பார்க்கின்ற “கிறிஸ்துவுக்குள்ளான” காரியங்களுக்கு மூலக்காரணமாக அமைந்தது அவருடைய முன்னறிவு தான். கிறிஸ்தவர்களுடைய மனங்களிலும், இருதயங்களிலும் அவருடைய சித்தம் இடம்பெறவேண்டும் என்பதற்காகவே இந்த ஆளுகை இந்தக் கடைசி நாட்களில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. தேவனுடைய ராஜ்யமானது கிறிஸ்துவின் ராஜ்யத்தினுடைய வல்லமையினாலும், கிருபையினாலும் சபையின் ஒவ்வொரு அங்கத்தினர்களுக்குள்ளும் இடம்பெற்றுள்ளது. பரிசுத்த ஆவியானவர் தேவனுடைய பிரசன்னத்தை வெளிப்படுத்துகின்றார்.

நித்திய ராஜ்யத்தில் பிள்ளைகளை ஏற்படுத்த வேண்டும் என்பதே தேவனுடைய சித்தம், மேலும் அவர் தமது சித்தத்தைக் கட்டுப்படுத்தும் வல்லமையுள்ளவராக இருக்கின்றார். பிள்ளைகளுக்கு எப்பொழுதுமே தேர்ந்தெடுக்கின்ற உரிமை இருப்பதினால், அவருடைய சித்தம் எல்லா மனிதருடைய வாழ்க்கையிலும் நிறைவேறாமல் போகலாம். அது நிறைவேறுவதற்கு எவ்வளவு காலம் ஆனாலும் பொறுத்திருக்க வேண்டிய பொறுமை அவருக்கு இருப்பதினால், இந்தப் பூமியில் மீதம் இருக்கும் மக்களுடைய வாழ்க்கையில் அது நிறைவேறும். சர்வ வல்லமையுள்ள தேவனானவர் அன்பும், பொறுமையும் உள்ளவராய் இருக்கிறார்.





இயேசு கிறிஸ்து தமது பிதாவாகிய தேவனுடைய சித்தத்தை நிறைவேற்ற மனதிலே தீர்மானித்திருந்தார்; இந்தப் பூமியில் வாழும்போது அப்படியே செயல்பட்டார். இப்பொழுதும் நமது ராஜாவாகவும், ஆசாரியராகவும் அப்படியே செயல்படுகின்றார். *யோவான் 12:49,50; மத்தேயு 26:42.* தங்களுடைய “விருப்பப்படி செயல்படுகின்ற” இயற்கையான மனோசக்தி மனிதர்களுக்குள்ளேயே இருக்கின்றது. ஒரு மனிதனுடைய மனதிற்கும், அவனுடைய நடத்தைக்கும் இடையில் விருப்பம் செயல்படுகின்றது. *1 கொரி. 7:37.* நாம் தேவனுடைய சாயலில் படைக்கப்பட்டிருப்பதினால், அவருடைய விருப்பத்திற்கேற்ப நம்முடைய விருப்பத்தை கட்டுப்படுத்திக்கொள்ளமுடியும். தங்கள் மனதில் இருக்கும் காரியங்களை செயல்படுத்துவதில் இச்சையடக்கமுள்ள கிறிஸ்தவர்கள் தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றுகிறார்கள். தனி நபர் வேத பாடம், தனிப்பட்ட நம்பிக்கை, தேவனுடைய வார்த்தைகளின் மீதான நம்பிக்கை ஆகியவற்றைப் பொறுத்தே நமது விசுவாசம் அமையும். முதிர்ச்சிப் பெற்ற கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவின் சிந்தை உடையவர்களாக இருப்பதினால், தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றுவதையே தங்கள் குறிக்கோளாக கொண்டு வாழ்கின்றனர். *1 கொரி. 2:16.* “அவர் நீதியுள்ளவராயிருக் கிறாரென்று உங்களுக்குத் தெரிந்திருப்பதினால், நீதியைச் செய்கிறவனெவனும் அவரில் பிறந்தவனென்று அறிந்திருக்கிறீர்கள்.” *1 யோவான் 2:29.* “நீதியைச் செய்யாமலும் தன் சகோதரனில் அன்பு கூராமலும் இருக்கிற எவனும் தேவனால் உண்டானவனல்ல.” *1 யோ. 3:10.*

இப்பாடத்தில் தேவனுடைய மக்களுக்குள் இருக்கும் அவருடைய ராஜ்யத்தைப் பற்றி விளங்கிக்கொள்வதற்கு மேற்கண்ட இறைக் கோட்பாட்டை நாம் கவனிக்கவேண்டும்.

**பாடம்**

பின்வரும் நபர்களையும் தேவனுடைய கோட்பாடுகளையும் பற்றி நாம் தெளிவு பெற்றுக்கொண்டால் தான் பழைய ஏற்பாட்டில் வாழ்ந்த மக்களுக்குள் இருந்த தேவனுடைய ராஜ்யத்தைக் கண்டறியமுடியும்.

1. பழைய ஏற்பாட்டு விவரங்களில் சர்வ வல்லமையுள்ள தேவனுடைய பிரசன்னம் காணப்படுகிறது. அவர் தமது தீர்மானத்தின்படியும், கிருபையின்படியும் நினைப்பதை செய்துமுடிக்கின்றார். *2 தீமோ. 1:9.*

2. சர்வ வல்லமையுள்ள தேவனால் "ஜீவாத்துமாக்களாக" படைக்கப்பட்ட மக்கள் தங்கள் ஆவிகளில் தேவனுடைய சாயல் உடையவர்களாக ஆண் அல்லது பெண் சரீரங்களில் வாழ்கின்றார்கள், அவர்கள் தங்கள் இயல்பான தேவைகளை நிறைவுசெய்துகொள்ளத் தேடுகிறார்கள். *ஆதி. 1:27; 2:7; கலாத்தியர் 3:28.*

3. "தேவனுடைய ராஜ்யம் உங்களுக்குள் இருக்கிறது" என்று இயேசு அறிவித்தபடி மனிதர்கள் ஒரு குறிப்பிட்ட வளர்ச்சி அடைந்த பிறகு அவர்களுக்கு உள்ளேயும்/வெளியேயும் ஆவிக்குரிய வளர்ச்சி உண்டாகிறது. *லூக்கா 17:21; மாற்கு 4:26-29; அப்போஸ்தலர் 20:25; 1 கொரிந்தியர் 3:7-9.*

4. தேவனுடைய உடன்படிக்கைகளை மீறும்படி மக்களை ஏவுகின்ற சாத்தானுடைய வல்லமை தீய சக்தியாக இப்போது செயல்படுகின்றது. *1 நாளா. 21:1.*

இயேசு கிறிஸ்து போதித்ததும், வாழ்ந்துகாட்டியதுமான வாழ்க்கையை மக்கள் வாழ்வதற்குத் தனித்தன்மை உடைய இந்த முதல் மூன்று விஷயங்களும் ஒன்றிணைந்து செயல்பட்டிருக்கின்றன. பரிசுத்த வேதாகமத்திலுள்ள தேவனுடைய ராஜ்யத்தின் விவரங்களில் இதை நாம் பார்க்கமுடியும். *யோவான் 3:21.* கிறிஸ்துவுக்குள் ஆவிக்குரிய சகல ஆசீர்வாதங்களும் பெற்றவர்களாய் வாழும் கிறிஸ்தவர்கள் ஒவ்வொருவருக்குள்ளும் தேவனுடைய ராஜ்யம் இருக்கிறதுபோல, லேவி ஆசாரியத்துவ காலத்தில் தனிப்பட்ட ஒரு இஸ்ரவேலனுக்குள் தேவனுடைய ராஜ்யம் இருந்ததில்லை. மேசியா வருகிறதற்கான காலம் நிறைவேறும் வரைக்கும் தேவனுடைய ராஜ்யத்துக்குட்பட்டு வாழ்ந்தவர்கள் பிள்ளைகளுக்கான "முழு உரிமையும்" பெறமுடியவில்லை. *கலா. 4:1-7.* தமது நித்திய ராஜ்யத்தில்





பிள்ளைகளை சேர்த்துக்கொள்ளும் திட்டம் இருந்ததினால், ராஜ்யத்துக்குரிய பண்பாட்டை பிள்ளைகள் பழகிக்கொள்ளவேண்டியதும் அவசியமாய் இருந்தது.

இயேசுகிறிஸ்துவானவர் அநேகம் பிள்ளைகளை மகிமையில் கொண்டுவந்து சேர்க்கத்தக்கதாக மனிதர்களுக்குள் தேவனுடைய ராஜ்யத்தை ஏற்படுத்தவேண்டும் என்ற திட்டம் உலகத்தோற்றத்திற்கு முன்பிருந்தே தேவனுடைய மனதில் இருந்து வருகிறது. *எபிரெயர் 2:10; வெளி. 3:21.* இந்த திட்டத்திற்கு உறுதுணையாக, முதலாவதாக, அவர் திருமண உடன்படிக்கையை ஏற்படுத்தினார். இதன் மூலமாக சரீரப் பிரகாரமான குடும்பம் உருவாவதற்கும், பிள்ளைகள் பிறப்பதற்கும் வாய்ப்பு உண்டானது. *ஏசாயா 43:6-7.* இரண்டாவதாக, வாழத் தகுந்தபடி பூமியை ஆயத்தப்படுத்தினார். இதன் மூலமாக மாம்சத்துக்குரிய சரீரத்தில் வாழும் ஒவ்வொருவருடைய வாழ்நாள் தேவைகளும் சந்திக்கப்படுகின்றன. *சங்கீதம் 8:1-9.* மூன்றாவதாக, கிருபையைத் தந்தருளினார், ஏனெனில் மனுக்குலம் நன்மை, தீமை இன்னதென்று அறியத்தக்க அறிவை அடைந்துவிட்டதனால், தீமைக்குப் பதில் நன்மையைத் தேர்ந்தெடுக்கவேண்டிய பொறுப்பும் வந்துவிட்டது. *ஆதி. 6:8; ரோமர் 12:21.* நான்காவதாக, மனிதனுடைய ஆவிக்கு நன்மை உண்டாகும்படி ஜீவனுடைய ஆவியின் பிரமாணத்தை தந்தருளினார். ஏனெனில், மனிதனுடைய ஆவி தேவனிடமிருந்து வந்தது. *ஆதி. 26:4; ரோமர் 8:2.* ஒரு வேளை யாக்கோபு இந்த விஷயங்களை மனதிற்கொண்டு "நன்மையான எந்த ஈவும் பூரணமான எந்த வரமும் பரத்திலிருந்துண்டாகி, சோதிகளின் பிதாவினிடத்திலிருந்து இறங்கி வருகிறது; அவரிடத்தில் யாதொரு மாறுதலும் யாதொரு வேற்றுமையின் நிழலுமில்லை" என்று கூறியிருக்கலாம். *யாக்கோபு 1:17.*

இந்தப் பூமியில் வாழும் தேவனுடைய மக்களுக்குள் அவருடைய ராஜ்யம் இருக்கின்றது. ஆகவே, அது மற்றவர்களுக்குள்ளும் இருக்கிறதென்று அறிவிக்காதபடிக்கு எச்சரிக்கையாய் இருக்கவேண்டும்.

இப்படி அறிவித்தால் நியாயத்தீர்ப்பு நாளிலே கணக்குக் கொடுக்கவேண்டும். தேவன் பழைய ஏற்பாட்டில் நமக்குத் தெரியப்படுத்தியுள்ள விவரங்களின் அடிப்படையில் நம்மால் பொது விளக்கம் மட்டுமே தரமுடியும், ஆனால் அவரால் மட்டுமே தீர்மானம் எடுக்கமுடியும். நமது பொது விளக்கம் பின்வரும் விவரங்களின் அடிப்படையிலேயே அமையவேண்டும்; ஒன்று, தேவனுடைய பிரசன்னம்; இரண்டு, அவருடைய கிருபையால் கிடைக்கும் சமாதானம்; மூன்று, அவருடைய சித்தத்தை செயல்படுத்தும் மனிதன். *மத்தேயு 7:24.*

ஏதேன் தோட்டம் மட்டுமே கிருபைக்கு விதி விலக்காக இருந்தது. தேவனுடனான உடன்படிக்கை குறித்த விஷயத்தில் அவர்கள் சுயமாக முடிவெடுக்கும்படி சாத்தான் அவர்களைத் தூண்டியது வரைக்கும் தேவன் அங்கிருந்தார். ஆதாம், ஏவாள் அவருடைய சித்தத்தை நிறைவேற்று பவர்களாக இருந்தார்கள். சுயமாக முடிவெடுக்கும்படி தேவன் ஆதாமை ஊக்குவித்தார். ஆதாம் தன் மனவிருப்பத்தின்படி மற்ற ஜீவஜந்துக்களுக்கு எந்தெந்தப் பேரிட்டானோ அதுவே அதற்குப் பேராயிற்று. *ஆதியாகமம் 2:19.* ஒரே ஒரு மரத்தின் பழத்தைத் தவிர்த்து "தோட்டத்திலுள்ள சகல விருட்சத்தின்" பழங்களையும் புசிப்பதற்கு ஏவாள் உரிமை பெற்றிருந்தாள். *ஆதி. 2:15-17.* தேவன் மனிதனுடைய வாழ்க்கையை அமைத்துள்ள அமைப்பின்படி மாம்சத்திற்குரிய வகையிலும், ஆவிக்குரிய வகையிலும் ஏதேன் தோட்டத்தில் பொருத்தமான சூழல் அமைந்திருந்தது. சிருஷ்டிப்பிலுள்ள தேவனுடைய நோக்கத்தின்படி அது அவருக்கும், மனுக்குலத்துக்கும் ஏற்ற இடமாக இருந்தது. பாவஞ்செய்யும்படியான தீய நோக்கம் கொண்ட மக்களுக்காக அது **உருவாக்கப்படவில்லை**. *யாக்கோபு 1:13-15; 2 பேதுரு 2:19.* மனுக்குலம் பாவம் செய்ததின் விளைவாக, அதன் வழியை அவர் அடைத்துவிட்டார். *ஆதி. 3:24.*

ஆதாம் என்ற ஆணுக்கும் ஏவாள் என்ற பெண்ணுக்குமுரிய இயல்பான தேவைகளை தேவன் சந்தித்தார். அவர்களுடைய சரீர மற்றும் சமூக பாதுகாப்பு, ஒருவருக்கொருவர் இடையிலான உடலுறவு, தனிப்பட்ட சாதனையும் அதனால் கிடைக்கும் புகழ்ச்சியும் ஆகியவை இவைகளில்





அடங்கும். "நீர் அவனைத் தேவதூதரிலும் சற்று சிறியவனாக்கினீர் மகிமையினாலும், கனத்தினாலும் அவனை முடிசூட்டினீர்" *சங்கீதம் 8:5.* பூமியில் பரலோகம் இருந்தது என்று தான் சொல்லவேண்டும். தேவனுடைய ராஜ்யத்தின் ஒரு பகுதி ஆதாம் ஏவாளுக்குள் இருந்தது. மனிதரை தேவன் படைத்திருக்கின்ற விதத்திற்கு ஏற்றவைகளையும், அவர்களை படைத்ததற்கான நோக்கத்திற்கு ஏற்றவைகளையும் அவர் தந்தருளினார். மேலே பார்த்த நான்கு குறிப்புகளையும் கவனத்தில் கொண்டு ஆதியாகமத்தின் முதல் மூன்று அதிகாரங்களையும் கவனமாக வாசியுங்கள். தேவன் ஆதாம் ஏவாளை தமது ராஜ்யத்துக்குட்பட்டவர்களாக வாழச்செய்தார், சாத்தானும் எதிராளியாக அங்கு இருந்தான்.

மீதமுள்ள விவரங்கள் ஆதியாகமம் நான்காம் அதிகாரத்தில் துவங்குகின்றன. இந்த விவரங்கள் தேவனுடைய ராஜ்யத்தில் மனிதனுடைய நிலைமையை தெரிவிப்பவை. சாத்தான், நினைத்ததை சாதித்துவிட்டான்; மனுக்குலம் தேவ மகிமையை இழந்துவிட்டது. *ரோமர் 3:23.* வளர்ச்சியடைந்த மக்களுக்கு "நன்மை தீமை அறியத்தக்க அறிவு" இருக்கின்றபடியால், தீமைக்குப் பதிலாக நன்மையை தேர்ந்தெடுக்காத பட்சத்தில் நாம் தேவனுக்கும், நம்முடைய மனச்சாட்சிக்கும் கணக்குக் கொடுக்கவேண்டியிருக்கின்றது. ஒரு நாத்திகன் தன் மனதுக்குத் தகுந்தபடி எது நல்லது, எது கெட்டது என்று எல்லாவற்றையும் பற்றி முடிவுசெய்து வைத்திருக்கின்றான். அதற்குத் தகுந்தபடி அவன் நடந்துகொள்கிறானா இல்லையா என்று அவனுடைய மனச்சாட்சி அவனைக் கண்காணிக்கிறது. மனிதர்கள் எல்லாரும் "ஆதாமுக்குள்" உருவானவர்களாக இருப்பதால், கிடைத்திருக்கின்ற "நன்மை தீமை" பற்றிய அறிவு இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையை உண்டாக்குகிறது. *அப். 17:26; யாக்கோபு 4:17* பார்க்கவும்.

தேவனுடைய ராஜ்யத்தை விட்டுவிட்டு தேவனைப் பற்றி யோசிக்க முடியாது; ஆகையினால், அவருடைய ராஜ்யத்துக்குத் தகுந்த வாழ்க்கையை நாம் வாழாமல் அந்த ராஜ்யத்தில் நம் வாழ்வு இடம் பெறவும் வாய்ப்பில்லை. *1 யோவான் 4:11-17* வசனங்கள் இதை விளக்குகின்றன. ஏதேன் தோட்டத்தில் காணப்பட்ட வாழ்க்கை, தேவனுக்கும் இரண்டு மனித

உயிர்களுக்கும் இடையில் ஏற்பட்டிருந்த அன்பினாலான உறவைப் பற்றியது. இந்த உறவு சாத்தானால் என்றைக்கு தகர்க்கப்பட்டதோ, அந்த நாள் முதற்கொண்டு இதை மீண்டும் சரி செய்யும்படியாக தேவன் தொடர்ந்து செயல்பட்டுவருகின்றார். *யோவான் 3:16.* பழைய ஏற்பாட்டில் வாழ்ந்த மக்கள் தேவன் மீது அன்பு வைத்து, அவர் மீது விசுவாசம் உள்ளவர்களாய் இருந்தார்கள். இவரும் அவர்களது தேவைகளை சந்தித்துப் பாதுகாத்தார். இந்தச் சூழ்நிலையை நாம் கவனிக்கும்போது, தேவனுடைய ராஜ்யம் நிச்சயமாகவே அங்கு செயல்பட்டது என்று உணரமுடியும்.

தங்களது அனைத்து இயல்பான தேவைகளையும் பெற்றோர் நிறைவு செய்வதால், பிள்ளைகள் அவர்கள் மீது அன்பு காட்டுகிறார்கள். ஆண்களும், பெண்களும் வளர்ச்சியடைந்து பெரியவர்களாகும்போது, உடலுறவு கொள்ளவேண்டும் என்ற உள்ளுணர்வு அவர்களுக்குள் உண்டாகின்றது. தேவனுடைய மக்களாயிருப்பவர்கள் எதிர்பாலினத்தைச் சேர்ந்தவர்களை திருமணம் செய்துகொள்கின்றார்கள். மக்கள் தங்களுடைய இயல்பான தேவைகளை நிறைவு செய்பவர்கள் மீது அன்பு காட்டுகிறார்கள். “நன்மையான எந்த ஈவும், பூரணமான எந்த வரமும்” தேவனிடமிருந்து வருகின்றது என்று நாம் நம்புவோமானால், அவரிடத்தில் அன்பு காட்டாமல் இருக்கமாட்டோம். நன்மையானது என்றால் நல்ல பொருள் என்று அர்த்தம்; பூரணமானது என்றால் முழுமையானது என்று அர்த்தம். கிறிஸ்தவர்கள் ஒவ்வொருவருடைய உள்ளான மனிதனும் கிறிஸ்துவைப் போல் மாறத்தக்கதாக அவர்கள் தேவனுடைய இயற்கை நியதிகளுக்கும், “சுயாதீனப் பிரமாணமாகிய பூரண பிரமாணத்துக்கும்” கீழ்ப்படிவதினால் நன்மையான ஈவுகள் அவர்களுக்குக் கிடைக்கின்றன. *யாக்கோபு 2:12.* தேவனுடைய ஈவுகள் மீது தனிப்பட்ட விசுவாசம் இருப்பதினாலேயே கிறிஸ்தவன் தேவன் மீது அன்பு காட்டுகிறான்.

தேவனுடைய மக்கள் பாவஞ்செய்வதால் சாத்தான் தனது வல்லமையை பயன்படுத்தி, அவர்களுக்கு ஆவிக்குரிய மரணத்தை ஏற்படுத்துகிறான். தேவன் தமது கிருபையினால் அந்த மரணத்திலிருந்து மக்களை விடுவிக்கும்படியாகவே வித்தியாசமான ஆசாரியத்துவ





முறைமைகளை ஏற்படுத்தினார். மெல்கிசேதேக்கின் ஆசாரியத்துவ முறைமையை மனதிற்கொண்டு நாம் பழைய ஏற்பாட்டை படித்தால் தான், அதில் தேவனுடைய ராஜ்யம் இருப்பதை அறிந்துகொள்ளமுடியும். கடந்த மூன்று பாடங்களில் நாம் பார்த்த காரியங்கள் மனிதர் மத்தியில் தேவனுடைய ராஜ்யம் சாத்தியமானது தான் என்று காட்டுகின்றன. வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால், தனது “விசுவாசக் கதவினை” திறப்பதற்கு எந்தெந்த கிறிஸ்தவன் சிரமப்படுகிறானோ, அவன் பழைய ஏற்பாட்டில் உள்ள தேவனுடைய ராஜ்யத்தைப் பற்றிய காரியங்களை தேவனுடைய துணையோடு கவனித்துப் பார்க்கவேண்டும். இப்படிச் செய்வதினால், தேவன் தமது குமாரனை அனுப்புவதற்கு ஏற்ற காலம் வரும் வரையிலும், தமது நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக எப்படி பொறுமையுடனும், அன்புடனும் அவர் செயல்பட்டுவந்தார் என்பதை கற்றுக்கொள்ளமுடியும். தேவனுடைய ராஜ்யம் இயேசுவின் சீஷர்கள் ஒவ்வொருவருடைய மனதிலும், இருதயத்திலும் வரும்படியாக ஜெபிப்பதற்கு அவர் கற்றுக்கொடுத்தார். அவர்களும், மற்றவர்களும் தங்களுடைய செயல்கள் மூலமாக தேவனுடைய ராஜ்யம் தங்கள் வாழ்க்கையில் வந்திருக்கிறதா இல்லையா என்று தெரிந்துகொள்ளமுடியும். *மத்தேயு 7:18,24.*

*பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக, உம்முடைய ராஜ்யம் வருவதாக; உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோல, பூமியிலேயும் செய்யப்படுவதாக. எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை இன்று எங்களுக்குத் தாரும். எங்கள் கடனாளிகளுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல எங்கள் கடன்களை எங்களுக்கு மன்னியும். எங்களைச் சோதனைக்குட் படப்பண்ணாமல், தீமையினின்று எங்களை இரட்சித்துக் கொள்ளும். மத்தேயு 6:9-13.*

ஒருவனுடைய மனதில் இருக்கும் தீர்மானத்துக்கும், அவனுடைய செயலுக்கும் இடையில் செயல்படுவது தான் விருப்பம். ஒருவன் அல்லது

ஒருத்தி தன்னுடைய விருப்பத்தைக் கட்டுப்படுத்தும் சக்தியை பெற்றிருக்கும்போது, மனதில் செய்யத் தீர்மானிப்பது எதுவோ அதை செய்கிறான்/ள். *1 கொரி. 7:37.* மக்கள் எப்போதுமே இப்படிச் செயல்படுவதில்லை. இதுதான் உண்மை ஆயினும், தேவன் ஒன்றைச் செய்யவேண்டும் என்று மனதில் முடிவு செய்துவிட்டால், தம்முடைய வல்லமையைப் பயன்படுத்தி அதைச் செய்துமுடிக்கின்றார். மக்களுடைய நன்மைக்காக தேவன் செய்யும் ஏற்பாடுகளின் மூலம் தம்முடைய மனவிருப்பத்தை அவர் வெளிப்படுத்துகின்றார்; அந்த விருப்பம் மக்களுடைய வாழ்க்கையில் நிறைவேறுவதற்கு இந்த ஏற்பாடுகள் உதவிகரமாக இருக்கின்றன.

“முதல் நான்கு பாடங்களில் இடம் பெற்றுள்ளவைகளின் தொடர்ச்சியாக, மெல்கிசேதேக்கின் ஆசாரியத்துவ முறைமை, லேவி ஆசாரியத்துவ முறைமை ஆகியவற்றை பற்றிய பாடம் இடம்பெற்றுள்ளது எப்படி என்று கிறிஸ்தவர்கள் கேட்கக் கூடும். தேவன் தம்முடைய வாக்குத்தத்தத்தின் பிள்ளைகளோடு செய்துகொண்ட உடன்படிக்கைகளை கிறிஸ்தவர்கள் புரிந்துகொள்ளவேண்டியது முக்கியமானதா? கடந்த பாடங்களின் தலைப்புகளை நீங்கள் கவனியுங்கள். தேவன் தெரிவிக்கின்ற நோக்கம் புதிய ஏற்பாட்டில் துவங்குவது இல்லை. அது உலகத்தோற்றத்திற்கு முன்னே தேவனுடைய மனதில் தொடங்கிவிட்டது. மெல்கிசேதேக்கின் ஆசாரியத்துவ முறைமை செயல்பட்டு வந்த காலத்தில் வாழ்ந்த ஆபிரகாமுடன் தேவன் செய்துகொண்ட உடன்படிக்கைகளின் மூலமாக கிறிஸ்தவர்கள் வாக்குத்தத்தத்தின் பிள்ளைகளாக ஆகிவிட்டார்கள். தேவனுடைய செயல்பாடுகள் இன்னும் முடிவுபெறவில்லை. புதிய ஏற்பாட்டை, அதிலும் விசேஷமாக எபிரெயர் நிருபத்தை நேர்த்தியாகப் படிப்பதற்கு ஆயத்தமாவதற்கு முன்பு இந்த இரண்டு ஆசாரியத்துவ முறைமைகளின் செயல்பாடுகளையும் கிறிஸ்தவர்கள் புரிந்துகொள்ள வேண்டியது அவசியம். எபிரெய நிருபத்தின் எழுத்தாளன், தனது நிருபத்தை பெற்றுக்கொள்பவர்கள் இந்த இரண்டு ஆசாரியத்துவ முறைமைகளையும் தேவன் ஏற்படுத்தினதற்கான காரணத்தை அறிந்தவர்கள் என்று யூகித்து எழுதினான்.





இயேசு கிறிஸ்துவின் ஆசாரியத்துவத்தின் மீது கிறிஸ்தவர்கள் விசுவாசம் வைக்கும் பொருட்டு, எபிரெயருக்கு எழுதப்பட்ட நிருபத்தைக் கட்டாயம் புரிந்துகொள்ளவேண்டும். அன்று எபிரெய நிருபத்தை பெற்றுக் கொண்டவர்கள் அறிந்திருந்த காரியங்களை நாமும் அறிந்துகொண்டால் தான், எபிரெய நிருபத்தை நேர்த்தியாக வாசிக்கமுடியும். புதிய ஏற்பாட்டில் உள்ள எல்லா நிருபங்களையும் வாசிப்பதற்கும் இது பொருந்தும், இயேசு கிறிஸ்துவின் ஆசாரியத்துவ முறைமையின்மீது விசுவாசம் இல்லாத கிறிஸ்தவன் தேவனை நெருங்கவே முடியாது. மெல்கிசேதேக்கு மற்றும் லேவிய ஆசாரியத்துவ முறைமைகளை தேவனே ஏற்படுத்தினார் என்ற நம்பிக்கையில் உண்டாகும் நமது விசுவாசமே இயேசு கிறிஸ்துவின் ஆசாரியத்துவத்தைப் புரிந்துகொள்வதற்கும், அதன்மீது விசுவாசம் வைப்பதற்கும் முதன்மையானது; இது ஜீவப் பிரமாணம்; நமக்காகப் பரிந்து பேசுபவர் இயேசு கிறிஸ்து; தேவனுடன் ஐக்கியத்தை ஏற்படுத்தும் ஜீவனுக்குரிய வாக்குத்தத்தத்துக்காக நம் நிமித்தம் தமது சொந்த இரத்தத்தைப் பலியாகக் கொடுத்த நமது பிரதான ஆசாரியர் இவரே. *எபிரெயர் 8:10-12.*

தேவனுடைய ராஜ்யத்தையும் மறுமையின் வாழ்க்கையையும் பற்றி மனுக்குலத்திற்கு முழுமையாக விளக்கும்படி கிறிஸ்துவானவர் வருவதற்கு முன்னதாகவே தேவனுடைய ராஜ்யம் இருந்ததற்கான நம்பத்தகுந்த ஆதாரத்தை எபிரெயர் நிருப ஆசிரியன் முன்வைக்கின்றான். *லூக்கா 4:43; 1 யோவான் 1:1-4.* இதைக் கொண்டு தேவனுடைய ராஜ்யத்தை பற்றிய ஆராய்ச்சியை நாம் ஆரம்பிக்கமுடியும். தேவனுடைய உடன்படிக்கைகள் மீதும், வாக்குத்தத்தம்பண்ணுவதை நிறைவேற்றுகின்ற அவருடைய வல்லமையின் மீதும் விசுவாசம் கொண்டவர்களை *எபிரெயர் 11*–ஆம் அதிகாரத்தில் ஆவியானவர் வரிசைப்படுத்துகின்றார். அவர்கள் தங்கள் விசுவாசத்தை நீதியுள்ள நடக்கையின் மூலம் வெளிப்படுத்தினார்கள்; இதற்கான நீதியின் பலனை தேவனுடைய கிருபையால் பெற்றுக் கொண்டார்கள். அவர்கள் தேவனுடைய விருப்பத்தை மிகச் சரியாக செயல்படுத்தியது இதற்குக் காரணம் அல்ல, அவருடைய உடன்படிக்கைகள்

மீது விசுவாசம் கொண்டதே காரணம். தேவன் தமது உடன்படிக்கைகள் மூலம் தமது சித்தத்தை வெளிப்படுத்தியதால், எது சரி எது தவறென்று அவர்களால் அறிந்துகொள்ளமுடிந்தது. அவர்களுடைய இயல்பான தேவைகளை நிறைவு செய்யக்கூடிய வழிகளையும் இந்த உடன்படிக்கைகள் கொண்டிருந்தன. உடன்படிக்கைகள் தேவனுடைய சித்தத்தின் வெளிப்பாடாக இருந்ததனால், தேவனுடைய ராஜ்யத்துக்குரிய வாழ்க்கைக்கான கொள்கைகளும் அவைகளிலிருந்தன.

உதாரணமாக, ஆபேலோடும், அவன் சகோதரனோடும் தேவன் பண்ணியிருந்த உடன்படிக்கையின் மீது ஆபேலுக்கு விசுவாசம் இருந்ததினாலேயே அவன் நீதியாக நடந்தான். *எபிரெயர் 11:4.* தேவனோடு ஐக்கியம் கொள்ளக்கூடிய வாய்ப்பினை இந்த உடன்படிக்கை அவர்களுக்கு ஏற்படுத்திக் கொடுத்தது. தேவனுடைய ஆளுகை அவர்களுடைய இருதயங்களிலும், மனங்களிலும் இருக்கவேண்டும் என்பதே இந்த ஐக்கியம் முன்வைக்கும் நிபந்தனை ஆகும். ஆபேல் தன் விசுவாசத்துக்குக் கீழ்ப்படிந்தான்; ஆகையினால், தேவனுடைய கிருபையும் சமாதானமும் அவனுக்குக் கிடைத்தன. *ரோமர் 5:1.* தேவனுடைய பிள்ளையாக அவருடைய மகிமையில் பங்கு பெறுவோம் என்ற நம்பிக்கை இதன் பலனாக அவனுக்குக் கிடைத்தது. *ரோமர் 5:2.* தேவனுடைய ராஜ்யத்துக்கு ஏற்ற வாழ்க்கையை வாழும்படியான பக்குவத்தை இது அவனுக்குள் ஏற்படுத்தியது. *ரோமர் 3:3,4.* காயீன் தேவனுடைய உடன்படிக்கையை நிராகரித்து அவரை விட்டு தன்னைத் தூரப்படுத்திக் கொண்டான். தேவனையும் அவருடைய ராஜ்யத்தையும் தனித்தனியே பிரித்துப்பார்க்கமுடியாது. தேவனுடைய பரிசுத்த ஆவியானவர் தன்னோடே ஐக்கியம் கொள்வதற்கேற்ற பலியை அன்று ஆபேல் செலுத்த முடியாது இருந்தது என்பதை புரிந்துகொள்கிறோம்; ஆயினும், உலகத்தோற்றத்திற்கு முன்பாகவே இந்தக் குறைபாட்டைக் களைவதற்கு தேவன் திட்டமிட்டிருந்தார். *1 பேதுரு 1:18-21.* வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட நித்திய சுதந்தரமானது விசுவாசமுள்ள கிறிஸ்தவர்களுடன் தேவனுடைய ராஜ்யத்தில் அவருடைய மகனாக இருக்கும் உரிமையை குறிக்கின்றது. இதை ஆபேல்





பெற்றுக்கொண்டான். இதற்காகவே இயேசு கிறிஸ்து பிதாவின் சித்தத்திற்கு தமது சித்தத்தை ஒப்புக்கொடுத்தார். *எபிரெயர் 9:15; 11:39,40.* தேவனுடைய ராஜ்யத்துக்கு உகந்த வாழ்க்கையை இயேசுவானவர் வாழ்ந்ததினால், அவர் அந்த ராஜ்யத்துக்கு உட்பட்டவராய் இருந்தார். இதனால் தான் அவர் ராஜ்யத்தைக் குறித்துப் பிரசங்கிக்க முடிந்தது. ஆவிக்குரிய விஷயங்களை நாம் எடுத்துக்கொண்டால், நம்மிடம் இல்லாத ஒன்றைப் பற்றி பயனுள்ள வகையில் பிரசங்கிக்கவோ, போதிக்கவோ முடியாது.

ஆதாமுக்கு "ஏழாந்தலைமுறையான" ஏனோக்கு தேவனோடே சஞ்சரித்துக்கொண்டிருந்ததினால், சரீர மரணத்திலுள்ள வேதனை அவனுக்கு ஏற்படவில்லை. *ஆதி. 5:24; யூதா 14.* ஏனோக்குடைய விசுவாசம் தேவனுக்குப் பிரியமாய் இருந்ததினால், அவனுடைய உடலின் செயல்பாடுகள் மோசமான நிலையை அடைவதற்கு முன்பாகவே அவர் அவனை அழைத்து, அவனுடைய "உள்ளான மனிதனை" சரீரத்தை விட்டு எடுத்துக்கொண்டார். *எபிரெயர் 11:5,6; 1 கொரி. 15:50.* நாம் முன்பு பார்த்த பாடங்களில் நோவா, ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு, யோசேப்பு மற்றும் மோசே ஆகியோரின் விசுவாசத்தைப் பற்றி படித்திருக்கின்றோம். *எபிரெயர் 11:7-28.* இதன்படி இந்த எல்லா மனிதர்களுடைய வாழ்க்கையிலும், இவர்களுடைய உந்துதலால் தேவனுடைய வேலையைச் செய்த மனிதருடைய வாழ்க்கையிலும் தேவனுடைய ராஜ்யம் செயல்பட்டு வந்ததை காணமுடியும்.

நோவா "தேவனோடே சஞ்சரித்துக்கொண்டிருந்தான்." *ஆதி. 6:9.* "விசுவாசத்தினாலே நோவா தற்காலத்திலே காணாதவைகளைக்குறித்துத் தேவ எச்சரிப்புப்பெற்று, பயபக்தியுள்ளவனாகி, தன் குடும்பத்தை இரட்சிப்பதற்குப் பேழையை உண்டுபண்ணினான். *எபிரெயர் 11:7.* இந்த வசனத்தில் குடும்பப் பின்னணி இருப்பதை கவனியுங்கள். மனுக்குலத்துக்காக தேவன் ஏற்படுத்தின அவருடைய ராஜ்யத்தைப் பற்றி நாம் படிப்பவை எல்லாமே குடும்பத்தோடு சம்பந்தம் உடையவை. சீர்கெட்ட மனிதர்களால் நிறைந்து "கொடுமை மிக்கதாக" இருக்கும் இந்த

பூமியிலிருந்து தேவனுடைய ராஜ்யத்தில் வாழும்படி அவருக்கேற்ற பிள்ளைகள் உருவாவது சாத்தியம் இல்லை என்பது தேவனுக்கு உறுதியாகத் தெரிந்தது. *ஆதி. 6:11.* நோவா தேவனுடைய உடன்படிக்கைகளின் மீது பூரணமான விசுவாசம் கொண்டிருந்தபடியினால் நீதிமானாக எண்ணப்பட்டான். ஆகையால் அவன் நீதியைப் பிரசங்கிக்கிறவனாய் இருந்தான். *2 பேதுரு 2:5.* தேவன் எந்த மக்களுக்கு முடிவுகட்ட விரும்பினாரோ அந்த மக்கள் மத்தியிலே நோவா நீதிமானாய் நடந்து கொண்டான். *ஆதி. 6:9-13; 1 யோவான் 3:7,8.* அவன் தன்னிடத்தி லிருந்த விசுவாசத்தைக் குறித்து பிரசங்கித்தான்; அதன்படி நடந்து கொள்ளவும் செய்தான். அவன் சொல்லும் செயலும் ஒன்றாய் இருந்தன. *எபி. 11:1.*

தேவன் நோவாவுக்கும் அவன் குடும்பத்திலிருந்த ஒவ்வொரு வருக்கும் அவசியமான தேவைகளை சந்தித்தார். அவர்களுக்கு பூமிக்குரிய பாதுகாப்பும் சமூக அங்கீகாரமும் கிடைத்தன. தேவனோடு ஐக்கியமும் கிடைத்தது. அவர்கள் ஒவ்வொருவருக்கும் அடிப்படையான உறவுமுறை உண்டாவதற்கும், உடலுறவு தேவைகளை சந்தித்து நிறைவு செய்வதற்கும் வாழ்க்கைத் துணை உண்டாயிருந்தது. “தேவன் தனக்குக் கட்டளை யிட்டபடியெல்லாம்” நோவாவும் அவன் குடும்பத்தாரும் செய்து முடித்தார்கள். *ஆதி. 6:22.* அவர்கள் மீது தேவன் பிரியம் வைத்ததால் மகிமை, கனம் ஆகிய ஆவிக்குரிய தேவைகளில் தற்காலிகமாகத் திருப்தியை அனுபவித்தார்கள். அது மட்டுமல்லாமல் அழிவற்ற ஆவிக்குரிய வாழ்க்கையில் இந்த தேவைகளை நிரந்தரமாக திருப்திசெய்து கொள்வதற்கு நம்பிக்கையும் பெற்றுக்கொண்டார்கள். *ரோமர் 2:7-10.* கிறிஸ்தவர்களாகிய நாம் நமது இயல்பான தேவைகளை நிரந்தரமாக திருப்திப்படுத்திக்கொள்ளவே பிதாவாகிய தேவனிடத்திலும் இயேசு கிறிஸ்துவினிடத்திலும், நம்மோடே ஐக்கியம் கொண்டுள்ள பரிசுத்த ஆவியானவரிடத்தில் அன்புகூருகின்றோம். *2 கொரி. 13:14.*

நோவாவுக்கும் அவனுடைய குடும்பத்துக்குமுரிய இயல்பான எல்லா தேவைகளையும் நிறைவுசெய்வதற்கென்று தேவன் ஒரு திட்டத்தை





ஏற்படுத்தியிருந்தார். அவர்களுக்கும் தேவனுடைய ஏற்பாட்டின் மீது விசுவாசம் இருந்தது. விசுவாசமுள்ளவர்களாய் இருந்து, தீமையை நன்மையினாலே ஜெயிப்பதற்கு அவர்கள் கற்றுக்கொண்டபடியினால், தேவன் அவர்கள் யாவரையும் நீதியுள்ளவர்களாக எண்ணினார். *ரோமர் 12:21.* எண்ணிக்கை அடிப்படையில் பார்த்தால், ஜலப்பிரளயத்தின்போது சாத்தான் வெற்றிப்பெற்றது போன்று தோன்றுகிறது. தேவன் தமது ராஜ்யத்தில் பிள்ளைகளாக இருக்கும்படி மனுக்குலத்தின் ஒரு பகுதியை மீதியாக வைப்பதற்கு இது ஏதுவாக இருந்தது. *ரோமர் 9:27.* நோவாவும் அவனுடைய குடும்பத்தாரும் தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றியதால், அவர்களுக்குள் தேவனுடைய ராஜ்யம் இருந்தது என்ற முடிவுக்கு நாம் வரலாம். இயேசுவானவர் அறிவித்த ஜீவன் அவர்களுக்குள் இருந்ததனால், அவர்கள் தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றினார்கள். மனுக்குலம் காணத்தக்க வகையில் இயேசுவானவர் பூமியில் வாழ்ந்தபொழுது, தேவனுடைய சித்தத்திற்கு ஏற்றபடி வாழ்ந்தார். *எபிரெயர் 5:7-10.* இதுவே மனிதருடைய உள்ளான மனிதனுக்கு நன்மை அளிக்கக் கூடிய ஜீவப்பிரமாணம் ஆகும். தேவனுடைய கடைசி உடன்படிக்கையாகிய புதிய உடன்படிக்கைக்குரிய பிரமாணமும் இதுவே. *எபிரெயர் 8:10.*

நோவாவைப் பற்றிய விவரத்தை நாம் கவனிக்கும் பொழுது நான்கு தனித்தன்மை உடைய விஷயங்களை இந்தப் பாடத்தின் ஆரம்பத்தில் பார்த்தோம். இதே விஷயங்கள் ஆபிரகாமைப் பற்றியும், அவன் சந்ததியைப் பற்றியும் விவரிக்கும் விஷயங்களிலும் இருக்கின்றன. அவர்களுடைய சரீர மற்றும் ஆவிக்குரிய முன்னேற்றத்திற்கு என்று சர்வவல்லமையுள்ள தேவன் தமது வல்லமையினால் ராஜாக்களையும் இயற்கையையும் பயன்படுத்தினார். *ஆதி. 12:17; 14:17; 19:24; 26:6-11; 50:7,19-21.* அவர்களுடைய குடும்பங்களுக்கும் ஒவ்வொருவருடைய வாழ்க்கைக்கும் தேவையான சரீர தேவைகளை தேவன் சந்தித்தார். *ஆதி. 13:2; 24:66,67; 26:12-15; 30:41-43; 46:26,27; 47:5,6.* மெல்கிசேதேக்கின் ஆசாரியத்துவ முறைமை நடைமுறையில் இருந்தது;

அப்படியிருந்தாலும் அதைக் குறித்து ஒரு சரித்திர ஆதாரம் மட்டுமே இருக்கின்றது. ஆபிரகாம் தேவனுடைய ஆசீர்வாதத்தை பெறுவதற்காக இந்த ஆசாரியனை அணுகினான். *ஆதி. 14:18.* ஆதாம் முதல் மோசே வரையில் வாழ்ந்த "வாக்குத்தத்தத்தின் பிள்ளைகளுக்காக" இந்த ஆசாரியத்துவ முறைமை செயல்பட்டு வந்தது என்று நாம் கருதலாம். *எபிரெயர் 7:3-4.* ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு ஆகிய எல்லோருடைய பெயர்களுமே விசுவாசமுள்ளவர்களின் பெயர் பட்டியலில் சேர்க்கப்பட்டிருந்ததினால், அவர்கள் உடன்படிக்கையை கைக்கொள்பவர் களாயும் இருந்தார்கள். *ஆதி. 17:8,9.* தேவனுடைய உடன்படிக்கை மீது அவர்களுக்கு இருந்த விசுவாசமே நீதி என்ற பலனைத் தந்தது. *ஆதி. 15:6.* அவர்கள் தேவனுடைய ராஜ்யத்தில் அவரோடு ஐக்கியம் உள்ளவர்களாய் இருந்தார்கள். தன்னுடைய சேஷ்ட புத்திர பாகத்தை விற்றுப்போட்டதைப் பற்றி மனம் மாற்றம் அடையமுடியாமற்போனதினால், இந்த ஆசீர்வாதத்தை யாக்கோபின் சகோதரன் ஏசா இழந்துபோனான். *எபிரெயர் 12:16,17.*

அழிவை காணாத மக்கள் அதாவது நரகத்திற்கு போகாதவர்கள் யாரென்றால், தேவனுடைய ராஜ்யத்தில் இருப்பவர்கள் மட்டுமே. *மாற்கு 9:47,48.* இந்த பூமியில் வாழும் சிறு பிள்ளைகளும் தேவனுடைய ராஜ்யத்துக்கு உரியவர்களாய் இருக்கின்றார்கள். பெரியவர்களாகி பாவஞ் செய்யும்போது, மக்கள் இந்த குடியுரிமையை இழந்துவிடுகிறார்கள். கிறிஸ்து வந்த பிற்பாடு மறுபடியும் பிறப்பதன் மூலமாக மக்கள் மீட்கப்படுவதற்கு வாய்ப்பு உண்டானது. *யோவான் 1:12,13.* இந்த ஆவிக்குரிய புதிய பிறப்பாகிய ஆசீர்வாதம் இஸ்ரவேலர்களுக்குக் கிடைக்கவில்லை; இருந்தபோதிலும், லேவிய ஆசாரியத்துவ முறைமை மூலமாகக் கொடுக்கப்பட்ட உடன்படிக்கை மீது அவர்களுக்கு இருந்த விசுவாசத்தைக்கொண்டு தேவன் அவர்களைக் காப்பாற்றிவந்தார். நியாயப்பிரமாணத்தால் அவர்களை இரட்சிக்க முடியவில்லை. ஆனாலும் தேவனுடைய உடன்படிக்கைகள் மீது அவர்களுக்கிருந்த விசுவாசம் விலையேறப்பெற்றதாயும் தேவனை பிரியப்படுத்துவதாயும் இருந்தது.





பழைய ஏற்பாட்டு விவரங்களை நாம் தொடர்ச்சியாகப் பார்த்து வரும்போது, அந்த நிகழ்வுகள் நம் மனதை வசப்படுத்துவதாக இருப்பதினால், தேவனுடைய மக்கள் அவருடைய சித்தத்தை நிறைவேற்றுவதற்காக அவர் எப்படிச் செயல்பட்டுவந்தார் என்பதை கவனிக்கத் தவறுவதற்கு அதிக வாய்ப்பு இருக்கின்றது. இதை நாம் எப்போதும் கவனித்தால் தான் அவருடைய ராஜ்யத்தைக் கண்டுகொள்ள முடியும். சர்வவல்ல தேவனுடைய வல்லமையின் மீது விசுவாசம் உள்ள மக்கள் தங்களை அவர் படைத்ததற்கான நோக்கம் நிறைவேறும்படியாக அவர் சித்தத்தின்படி செய்தார்கள். பழைய ஏற்பாட்டில் காணப்படும் இந்த மக்கள் எல்லாருமே தங்களுக்கு தேவன் நியமித்திருந்த இயல்பான தேவைகளை நிறைவு செய்துகொள்ளத் தேடினார்கள்.

ஒவ்வொரு பிரதான சம்பவத்திலும் அவர்களுடைய இயல்பான தேவைகளை சந்திப்பதில் தேவன் எப்படி அக்கறைக் காட்டினார் என்பதை நாம் பார்க்கவேண்டியது அவசியம். தேவன் ஆயத்தப்படுத்தியவைகளின் மீது விசுவாசம் கொண்ட மக்கள் அவருடைய வாக்குத்தத்தத்தின் பிள்ளைகளாகி நம்பிக்கையோடு வாழ்ந்தார்கள். இது மகிழ்ச்சியுள்ள வாழ்வுக்கான வழிகளை அவர்கள் "தேடுவதற்கும், தட்டுவதற்கும் கண்டடைவதற்கும்" அவர்களுக்கு வல்லமையைத் தந்தது. *மத்தேயு 7:7,8.* இவ்விதமாகவே அவர்களுக்குள் தேவனுடைய ராஜ்யம் இருந்தது. தேவனுடைய உடன்படிக்கைகள் மீது அவர்களுக்கு இருந்த விசுவாசத்தால் சாத்தானுடைய சதிகளுக்கு அவர்களால் விலகி இருக்க முடிந்தது. நன்மை இன்னதென்று கற்றுக்கொள்வதற்கும், தீமையை கண்டறிந்து தவிர்ப்பது எப்படி என்பதை கற்றுக்கொள்வதற்கும் தேவனுடைய கிருபை அவர்களுக்குத் தொடர்ந்து தேவைப்பட்டது. தமது உடன்படிக்கைகள் மீது விசுவாசம் கொண்டிருந்தபடியினால், அவர்களை நீதியுள்ளவர்களாக அவர் எண்ணினார். லேவி ஆசாரியத்துவ முறைமையின் கீழ் அவருடைய உடன்படிக்கைகளை கைக்கொள்வதற்குச் சில குறிப்பிட்ட விலங்குகளின் இரத்தம் பலி செலுத்தப்படவேண்டியிருந்தது. பழைய ஏற்பாட்டில் வாழ்ந்த மக்களுடைய வாழ்க்கையில் தேவனுடைய ராஜ்யம் இருப்பதை நாம் பார்க்க

வேண்டியது அவசியம்; ஆயினும், மாம்சத்துக்குரிய இஸ்ரவேல் ராஜ்யத்தில் இது காணப்படவில்லை. விசுவாசமுள்ளவர்களாய் வாழ்ந்த ஒரு சில மக்கள் தேவனுடைய சித்தத்தை முழுமையாக நிறைவேற்றினார்கள் என்று எபிரெயர் எழுத்தாளன் நமக்கு உறுதியாகக் கூறுகிறான். அநேக இஸ்ரவேலர்களுக்குள் தேவனுடைய ராஜ்யம் இருந்தது என்று அப்போஸ்தலனாகிய பவுல் உறுதியாகக் கூறுகின்றான். இருந்தபோதிலும், "சமுத்திரத்தின் மணலத்தனையாக" இருக்கின்ற ஆபிரகாமின் சந்ததியாரில் மீதியாயிருப்பவர்கள் மாத்திரம் சாத்தானுடைய இருண்ட ராஜ்யத்திலிருந்து இரட்சிக்கப்படுவார்கள். *ரோமர் 9:27;11:1-7.*

"உலகத்தோற்றத்திற்கு முன்னே" தேவனுடைய மனதில் இருந்தது என்ன என்பதைக் குறித்து கிறிஸ்தவர்களில் யாருக்கெல்லாம் தெளிவு இருக்கின்றதோ, அவர்களெல்லாரும் பழைய ஏற்பாட்டில் தேவன் தமது மக்களுடைய வாழ்க்கையில் தமது ராஜ்யத்தை செயல்படுத்தி வந்ததை காணக்கூடிய சரியான மனநிலையை கொண்டிருக்கிறார்கள். பழைய ஏற்பாட்டில் உள்ள தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்து தெளிவு பெற்றிருக்கின்ற கிறிஸ்தவர்கள், அந்த ராஜ்யத்தைப் பற்றிய இயேசுவின் பிரசங்கத்தைக் கேட்பதற்குச் சரியான மனநிலை உடையவர்களாக இருக்கின்றார்கள். *மத்தேயு 4:17.* இயேசுகிறிஸ்து இந்தப் பூமிக்கு வந்ததின் முக்கிய காரணங்களில் இதுவும் ஒன்று. *லூக்கா 4:43.* மக்கள் மனந்திரும்பி புதிய உடன்படிக்கையை ஏற்றுக்கொள்வதற்கு மனப்பூர்வமாய் விரும்புகின்ற வரையிலும், மனுக்குலத்துக்காக இயேசு சிலுவையின் மீது மரித்ததைப் பற்றிய பிரசங்கத்திற்கு மதிப்பு குறைவாகத் தான் இருக்கும். தேவனுடைய செய்தி தெளிவாக இருந்தது:

*அவன், தன்னிடத்தில் ஞானஸ்நானம் பெறும்படிக்குப் புறப்பட்டுவந்த திரளான ஜனங்களை நோக்கி: விரியன்பாம்புக் குட்டிகளே! வருங்கோபத்துக்குத் தப்பித்துக்கொள்ள உங்களுக்கு வகைகாட்டினவன் யார்? மனந்திரும்புதலுக்கு ஏற்ற கனிகளைக் கொடுங்கள்; ஆபிரகாம் எங்களுக்குத் தகப்பன் என்று உங்களுக்குள்ளே சொல்லத்தொடங்காதிருங்கள்; தேவன்*





*இந்தக் கல்லுகளினாலே ஆபிரகாமுக்குப் பிள்ளைகளை உண்டுபண்ண வல்லவராயிருக்கிறார் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். இப்பொழுதே கோடரியானது மரங்களின் வேர் அருகே வைத்திருக்கிறது; ஆகையால் நல்ல கனிகொடாத மரமெல்லாம் வெட்டுண்டு அக்கினியிலே போடப்படும் என்றான். லூக்கா 3:7,8,9.*